பக்கங்கள் 14

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 28 ஞாயிற்றுக்கிழமை 15.10.2023 அதிர்வு 76

## கத்தியால் குத்தி யுவதி கொலை!

### முன்னாள் காதலன் கைது

காதல் விவகாரத்தால் ஏற்பட்ட மோதலில் இளம் யுவதி ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 04



## தலைமன்னார் கடற்பரப்பில் 15 இந்திய மீனவர்கள் கைது

(மன்னார் நிருபர்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 15 இந்திய மீனவர்கள் நேற்று மாலை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு நேற்று இரவு மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். 04



## அப்துல் கலாமின் பிறந்த தின நிகழ்வு

- எஸ்.நிதர்ஷன் -

இந்தியாவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் 92ஆவது பிறந்த தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். பொதுசன நூலகத்தில் 04

# இனப்பிரச்சினை என்று இங்கு ஒன்றும் இல்லை

### இப்படிக் கூறுகின்றார் கம்மன்பில



- சுடர் திலீபன் -

“இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்றும் இல்லை. இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகள்தான் அரசியல் பிழைப்புக்காக இனப் பிரச்சினை நிலவுகின்றது என்றும், தீர்வு வேண்டும் என்றும் கூக்குரல் இடுகின்றனர். ஆனால், தமிழ் மக்கள் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் சுதந்திரமாக வாழ்கின்றார்கள்.”

- இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கையில் எந்தவொரு இடமும் தமிழர்களுக்குச் சொந்தம் அல்ல. ஆனால், நாட்டிலுள்ள 04



# வேகமாக இடம்பெற்று வருகின்றது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு

### இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவிப்பு

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் ஏனைய நாடுகளில் அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டங்களுடன் ஒப்பிடுகையில் மிக வேகமாக இடம்பெற்று வருகின்றது என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டுக்கு இணையாக மொரோக்கோவின் மராகேஷில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை பல சிரமங்களை எதிர்கொண்ட போது, அது ஒரு நடுத்தர வருமானம் கொண்ட நாடாக இருந்தது.

எனினும், கொவிட் பரவல் மற்றும் அதனால் ஏற்பட்ட பொருளாதார 04

# நாகபட்டினம் - கே. கே. எஸ். கப்பல் சேவை போதிய முன்பதிவு இன்மையால் இன்று ரத்து!

## வாரத்தில் மூன்று நாள்களுக்கு இயக்கத் திட்டம்



இந்தியா – இலங்கை இடையேயான 'செரியாபாணி' கப்பல் போக்குவரத்து சேவையின் இன்றைய பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

போதியளவு முன்பதிவு இல்லாத காரணத்தால் இன்றைய பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 'செரியாபாணி' கப்பல் சேவை வாரத்தில் மூன்று நாள்கள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இந்தியாவின் நாகபட்டினம் துறைமுகம் – காங்கேசன் துறை துறைமுகம் வரை பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை நேற்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் காணொளி காட்சி வாயிலாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றைய தினம் இந்தியாவில் இருந்து 50 பேரும், காங்கேசன்துறையில் இருந்து 30 பேரும் கப்பலில் பயணம் செய்தனர்.

இந்த நிலையில், இன்று போதிய அளவு முன்பதிவு இல்லாத காரணத்தால் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிப்பு வெளியாகி உள்ளது.

வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாள்கள் மட்டும் தற்பொழுது கப்பல் இயக்கப்பட உள்ளது என்று கூறப்படுகின்றது.



# சீனாவின் ஆய்வுக் கப்பல் நவம்பரில் வரவே அனுமதி

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

சீனாவின் ஆய்வுக் கப்பலான ஷியான்-6 இலங்கைக்கு பிரவேசம் செய்வதற்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு பின்னர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சீன ஆய்வுக் கப்பலான ஷியான்-06 இலங்கைக்கான விஜயததை இம்மாதம் 25 ஆம் திகதி மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தொடர்ச்சியாக கூறிவந்தது.

எனினும், பாதுகாப்பு அமைப்புச்சு குறித்த கப்பலின் பிரவேசத்துக்கான அனுமதி அளிக்கப்பட்டதாக ஆரம்பத்தில் கூறியிருந்தது. இருந்தும் பின்னர் அதனை இறுதி செய்கின்ற பணி வெளிவிவகார அமைச்சினுடையது என்று கூறியது.

இந்த நிலையில் கப்பலின் வருகை தொடர்பில் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது இந்தத் தீர்மானம் சீனாவுக்கு உத்தியோக பூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் நிகழ்ச்சி நிரலிடப்பட்ட பிற பணிகள் இருப்பதன் காரணமாகவே இந்தக் கப்பலின் பிரவேசத்தை பிற்போடுமாறு நாம் சீனாவைக் கோரியுள்ளோம் என்றார் வெளிவிவகார அமைச்சர்.

# இந்திய மீனவர்கள் 13 பேர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது!

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று (14) இந்தப் 13 மீனவர்கள் 3 படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மயிலிட்டி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை

ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் உத்தரவுக்கமைய இந்தச் சட்டமூலம் வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டம் திருத்தப்படவுள்ளது.

இந்த சட்டத்தில் சில சரத்துக்களின் பிழைகள் காரணமாக, லஞ்சம், ஊழல் விசாரணைக்காக புதிய ஆணைக்குழுவை அமைப்பது உள்ளிட்ட பல விடயங்களுக்குத் தடை ஏற்பட்டன.

இந்நிலையில் இந்த சட்டமூலம் அடுத்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கூடிய விரைவில் நிறைவேற்றப்படும் என்று நம்பப்படுகிறது என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது மேலும் தாமதமாகும் என்று விஜேதாச ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை வருட வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் நாடாளுமன்றத்தில் அந்தச் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.





# கொக்குத்தொடுவாய் - புலிபாய்ந்த கல்லில் அத்துமீறி சட்டவிரோத வாடிகள் அமைப்பு

## நடவடிக்கை எடுக்க தயங்கும் அதிகாரிகள் என்று குற்றஞ் சாட்டுகிறார் ரவிகரன்

கொக்குத்தொடுவாய் வடக்கு பகுதிக்கு இடைப்பட்ட பகுதியான புலிபாய்ந்த கல் கடற்கரையை அண்டிய பகுதியில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களால் சட்டவிரோதமாக வாடிகள் ஓகஸ்ட் மாதம் அமைக்கப்பட்டிருந்தன.

இரண்டரை மாதங்களாகியும் அதிகாரிகளால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றுகுற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் முறையிடப்பட்டிருந்த நிலையில் மீண்டும் புதிய வாடிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்ட தகவலையடுத்து அவ்விடத்துக்குச் சென்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலவரங்களைப் பார்வையிட்டார்.

இதனையடுத்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்–

கொக்குத்தொடுவாய் வடக்கு பகுதிக்கு இடைப்பட்ட பகுதியான புலிபாய்ந்த கல் கடற்கரையை அண்டிய பகுதி இதனோடு இணைந்த பல ஏக்கர் காணிகள் சிறு தானிய பயிர்ச்செய்கைக்காக தமிழ் மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது. தற்போது வன இலாகா கையகப்படுத்தியுள்ளது.

கடற்கரைப் பகுதியில் தமிழ் மீனவர்கள் பாரம்பரியமாக தொழில் செய்து வருகிறார்கள்.

அந்தப் பகுதியில் இரண் டரை மாதத்துக்கு முன்னர் பெரும் பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் வாடி அமைத்து அங்கு தொழில் மேற்கொள்கிறனர் என்று கொக்குதொடுவாய் மீனவர் அமைப்பும் அங்கு தொழில் செய்யும் தமிழ் மீனவர்களுமாக கிராம சேவையாளரிடம் முறைப்பாடு மேற்கொண்டனர். எனக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

அவ்விடத்துக்குச் சென்று பார்வையிட்ட போது, கிராம சேவையாளரால் அவ் வாடிகளை அகற்றும் படியும் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் சட்டத்தை மீறி அனுமதியின்றி அமைக்கப்பட்ட வாடி பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களால் இதுவரை அகற்றப்படவில்லை.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் அகற்ற கோரி பதாகை காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. ஆனால் இருந்த வாடியை விட இன்னுமொரு வாடி முழுமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் இரண்டு வாடி அங்கே பகுதியளவில் போடப்பட்டுள்ளன.

ஏற்கனவே தர்க்கப்படும் போது நாங்கள் முன்பு குறிப்பிட்டது போல் அங்கே புத்த பிக்கு ஒருவர் வர இருப்பதாகவும் 300 குடும்பங்களுக்கு மேல் குடியமர்த்த இருப்பதாகவும் கூறப்பட்ட தகவல்களை பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர் அங்கு இருந்தவர்களுடன் உரையாடியுள்ளார்.

இருப்பினும் அங்கிருந்தவர்களுக்கு இவ் விடயத்தை தெளிவுபடுத்திவிட்டு மேலதிக அரச அதிபருக்கும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக காணி உத்தியோகத்தருக்கும் தொடர்பு கொண்டு இவ்வாறான அத்துமீறல்களைத் தெரியப்படுத்தினேன்.

அனுமதியின்றி இவ்வாறான வாடி அமைப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்பதையும் 28 நாள்களுக்குள் சட்டத்தின்படி அகற்றப்பட வேண்டிய வாடிகள் இன்று (14) இரண்டரை மாதங்களாகியும் அகற்றப்படாதுள்ளது என்றும் தெரிவித்தேன். அதற்கு தாங்கள் எடுத்த நடவடிக்கை போதாது என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

இதற்கு அவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்தாவது –

உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும். இருப்பினும் பிரதேச செயலகத்துக்குச் சென்று இவ் விடயம் தொடர்பில் கதைக்கவுள்ளோம்.

இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து பெரியதொரு குடியேற்ற திட்டத்தை முறியடிக்கும் விதமாக செயற்பட வேண்டும்.

அத்துமீறி வாடி அமைப்பது பிழையான செயற்பாடு என்பதனை கூறிக்கொள்கிறோம் என்று தெரிவித்தனர் என்றார்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தலைமன்னார்...**

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் அவர்களைத் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

15 இந்திய மீனவர்களும் தற்போது தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கத்தியால் குத்தி...**

இந்தச் சம்பவம் கொழும்பு – கடுவெல பிரதேசத்தில் நேற்று இரவு இடம் பெற்றுள்ளது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ஆர்.டபிள்யூ. அனுதர்ஷினி என்ற யுவதியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

யுவதியின் வீட்டில் வைத்து அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யுவதியின் முன்னாள் காதலனைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலும் இருவரைத் தேடி வருகின்றனர்.

**வேகமாக இடம்பெற்று...**

நெருக்கடி காரணமாக அந்த நிலை வீழ்ச்சியடைந்ததுடன் குறைந்த வருமானம் கொண்ட நாடாக இலங்கை மாறியது.

இந்தநிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் இலங்கை மிகவும் சிறந்த மற்றும் விரைவான தீர்மானங்களை எடுத்து வருகின்றது." – என்றார்.

**இனப்பிரச்சினை என்று...**

25 மாவட்டங்களிலும் அவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்குச் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்கள் அனுமதியளித்துள்ளார்கள். இதனைச் சர்வதேச சமூகம் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும்.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது என்று செய்திகள் உலாவுகின்றன. இந்தப் பிரேரணைகள், தீர்மானங்கள் எதற்கு? நாட்டின் இறையாண்மையை மீறிய இப்படியான செயற்பாடுகள்தான் இலங்கையில் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் இன மோதலுக்கு வழிவகுக்கும்.

எனவே, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களை நிறைவேற்றும் வெளிநாடுகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளின் சொல்லைக் கேட்டு வெளிநாடுகளும், சர்வதேச அமைப்புகளும் செயற்படக்கூடாது." – என்றார்.

# அப்துல் கலாமின் பிறந்த தின நிகழ்வு



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அப்துல் கலாமின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், யாழ். பொதுசன நூலக பிரதம நூலகர் மற்றும் நூலக ஊழியர்கள், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.





# யாழிலும் வேகமாக பரவும் கண் நோய்!



## சுகாதாரத்துறை அறிவுறுத்து

இலங்கையில் பரவிவரும் கண் நோய் தற்போது யாழ் மாவட்டத்திலும் வேகமாக பரவி வரும் நிலையில் பொதுமக்களுக்கு சுகாதாரத்துறை அறிவுத்தல்களை வழங்கியுள்ளது.

யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் குறித்த அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது.

‘வேகமாக பரவிவரும் கண்நோயிலிருந்து எம்மை பாதுகாப்போம்’ என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி. மு. மலரவன் வழங்கிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

இலங்கை முழுவதும் தற்சமயம் பரவும் கண்நோய் கடந்த சில நாள்களாக யாழ். மாவட்டத்திலும் பரவ ஆரம்பித்துள்ளது. அடினோ வைரசால் பரவும் இந்த நோய் சாதாரணமான கண் வருத்தம் போன்றதே.

இந்தக் கண்நோயானது 70 வீதமானவர்களுக்கு ஒரு கண்ணில் வந்தால் மற்றைய கண்ணிலும் வரும். வீட்டில் உள்ள ஒருவருக்கு இக்கண் நோய் வரும் பட்சத்தில் 25 வீதம் வீட்டிலுள்ள ஏனையவர்களுக்கும் பரவக் கூடிய சாத்தியம் உள்ளது.

இந்தக் கண் நோயானது நேரடி தொடுகை மூலம் பரவக் கூடியது என்பால் பாடசாலைகள், அலுவலகங்கள், மற்றும் பொதுச்சந்தைகள் போன்ற மக்கள் கூடும் இடங்களில் பரம்பல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே இந்த நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக தீவிரப்படுத்த வேண்டிய ஒரு அவசர தேவை உணரப்படுகின்றது.

இந்நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை இலகுவில் நாமே இனங்காண முடியும். எவ்வாறெனில் இந்நோய் தாக்கத்துக்கு உள்ளான ஒருவருக்குக் கண்கள் சிவந்து இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும். ஒரு சிலருக்கு கண் கடிக்கும். கண்ணிலிருந்து தண்ணீர் வடியும். பெரும்பாலானவர்களுக்கு பூளை சாறாது. வெளிச்சத்தைப் பார்ப்பதற்குச் சிரமமாக இருக்கும். ஒருசிலருக்கு பூளை சாறலாம்.

இந்நோயானது தானாகவே மாறக் கூடியது. பெரும்பாலும் இதற்கு சிகிச்சை எதுவும் தேவையற்றது. இந்நோய் அரும்பு காலமானது (ஒருவரிலிருந்து தொற்று ஏற்படும் காலம்) 24 மணித்தியாலங்கள் தொடக்கம் 72 மணித்தியாலங்கள் ஆகும். இந்நோய் தொற்று ஏற்பட்ட 75 தொடக்கம் 80 வீதமானவர்களுக்கு 05 தொடக்கம் 07 நாள்களுக்குள் (சுமார் ஒரு வார காலத்தில்) குணமடையும்.

எனினும் 25 வீதமானவர்களுக்கு 02 தொடக்கம் 04 வாரங்கள்(சுமார் ஒரு மாத காலம்) வரை நோய் நீடிக்கலாம்.

பொதுவாகவே வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற தேவையில்லை. எனினும் ஒரு கிழமைக்கு மேலாக கண்நோய் தாக்கம் காணப்படுமாயின் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கோ வைத்திய நிலையத்திற்கோ சென்றால் அங்குள்ள வைத்தியர்கள் உங்களைப் பரிசோதித்து மேலதிக சிகிச்சை தேவைப்படும் பட்சத்தில் மாத்திரம் கண் வைத்தியரிடம் சிபார்சு செய்வார்கள்.

பொது மக்கள் இக்கண்நோய் ஏற்பட்டால் வேறு பாதிப்புக்கள் ஏற்படும், இது கொவிட் தொற்றுப் போன்ற உயிராபத்தை ஏற்படுத்தும் என்று அச்சப்படத்தேவையில்லை.

இதுவும் முன்னைய காலங்களில் வந்த சாதாரண கண்நோய் போன்றதே. எனினும் தற்போது தனிநபர் சுகாதாரத்தைப் பேணாத காரணத்தால் இந்நோய் வேகமாகப் பரவுவதால் பெரியளவில் மக்களால் விமர்சிக்கப்படுகிறது.

இக்கண் நோயானது பெரும்பாலும் கண்சிகிச்சை நிலையங்களிலிருந்து தான் ஒருவருக்குத் தொற்றக் கூடிய சாத்தியம் காணப்படும். பின்னர் அவர் பாடசாலைக்கோ அல்லது அலுவலகத்துக்கோ செல்லும் சந்தர்ப்பத்தில் இவரது நேரடித் தொடுகை மூலம் மற்றவர்களுக்கும் பரவக்கூடும்.

இந்நோயினைக் கட்டுப்படுத்துவது மிகவும் இலகுவானது. பின்வரும் சில சுகாதார நடைமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றுவதன் மூலம் இந்நோய்த் தாக்கத்தை இருவார காலப் பகுதிக்குள் கட்டுப்படுத்த முடியும்.

1. தொற்று ஏற்பட்ட (கண்நோய் ஏற்பட்ட) ஒருவர் பாடசாலைக்கோ அலுவலகத்துக்கோ செல்வதை முற்றாகத் தவிர்த்து சாதாரண தனிமைப்படுத்தலில் இருத்தல் அவசியம். கண் சிவப்பு மறைந்து கண்ணில் இருந்து நீர்வடிதல் முற்றாக குணமடைந்த பின்னரே பாடசாலைக்கோ அலுவலகத்துக்கோ செல்ல வேண்டும்.

2. இந்நோய் தொற்றுக்குள்ளான ஒருவர் கண்ணில் இருந்து வரும் நீரை கைகளால் தொட்ட பின்னர் கைகளைக் கழுவாது வேறு ஒருவரையோ ஒரு பொருளையோ தொடுவதை முற்றாகத் தவிர்த்தல் அவசியம்.

3. கண்நோய் ஏற்பட்டவர்களோ அவர்களை பராமரிப்பவர்களோ அன்றி நோய் தொற்று ஏற்படாது முன்னெச்சரிக்கையாக சாதாரண பொது மக்களோ அடிக்கடி கைகளைச் சவர்க்காரமிட்டு நன்றாகக் கழுவுதல் வேண்டும்.

4. நோய் ஏற்பட்டவர்களும் சரி சாதாரண பொது மக்களும் சரி எச்சந்தர்ப்பத்திலும் கண்களைக் கசக்குவதையோ கண்களைத் தேவையற்றுத் தொடுவதையோ முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.

5. கண்நோய் பாதிப்புக்குள்ளானவர் பாவித்த துவாய், தலையணை, உணவுத்தட்டுக்கள் தேநீர் குவளைகள் கட்டில் கதிரை என்பவற்றை பாவிப்பதை முடிந்தவரை தவிர்த்தல் . முடியாத சந்தர்ப்பங்களில் தொற்று நீக்கி கொண்டு சுத்தம் செய்த பின்னர் பாவித்தல்.

6. கண்களுக்கு லென்ஸ் பாவிப்பவர்கள் நோய் குணமடையும்வரை அதனைப் பாவிப்பதனைத் தவிர்த்தல் வேண்டும்.

7.நீச்சல் தடாகத்துக்குச் செல்வதைத் தொற்றுக்குள்ளானவர்கள் முற்றிலும் தவிர்த்தல் அவசியம்.

8. அடிக்கடி கைகளையும் முகத்தையும் சவர்க்காரமிட்டு கழுவுவதுடன் குளித்து சுத்தமாக இருத்தல் வேண்டும்.

9. கண்நோய் தாக்கம் ஏற்பட்டவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொரு மருந்தையும் கண்களுக்கு விடுவதை முற்றிலும் தவிர்த்தல் அவசியம். கண் வைத்தியர் ஒருவரின் ஆலாசனையின்றி ஸ்ரீரோயிட் மருந்துகளோ யவெை டிைழவைஉ மருந்துகளையோ உள்ளெடுப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

10. எனினும் பாதிப்புக்குள்ளான கண்களுக்குக் குளிரான ஒத்தடம் மற்றும் செயற்கை கண்ணீர் (Artificial Tears) பாவிக்க முடியும்.

எனவே அனைவரும் யாழ். மாவட்டத்தில் இக்கண்நோயின் பரம்பலை இரண்டு மூன்று வாரங்களுக்குள் கட்டுப்படுத்த மேற்கூறிய சுகாதார அறிவுரைகளைப் பின்பற்றுவதன் மூலம் பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் பலனற்ற முயற்சி

'தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிர மாதித்தன் மீண்டும் முருங்கை மரத்தின் மீது ஏறி, வேதாளத்தை இறக்கித் தன் தோளில் சுமந்து கொண்டு நடக்கத் தொடங்கினான்...!' என்ற விக்கிரமாதித்தன் கதையைப் படித்திருப்போம்.

அதுபோல சற்றும் மனம் தளராது தனது முயற சியை மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது தேர்தல் ஆணையம்.

பல தடவைகள் திகதிகள் அறிவிக்கப்பட்டு நின்று போன - தடைப்பட்டுப் போன - உள்ளூ ராட்சித் தேர்தல்களை நடத்தவே தனது முயற்சியை மீண்டும் மனம் தளராது ஆரம்பித்திருக்கின்றது தேர்தல் ஆணையம்.

இந்த ஆண்டு முற்பகுதியில் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு ரணி லின் அரசு உரிய நிதியை விடுவிக்காமல், நரித் தந்திரம் பண்ணியதால், வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் இத்தேர்தல் தொடர்ந்து முன்னெடுக்கப்படாமல், பல தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டு, இறுதியில் கால வரையறை குறிப் பிடாமல் தள்ளிப் போடப்பட்டுள்ளது.

இவ்வளவு காலமும் நடத்தப்படாமல், இந்த வருடத்திற்கான புதிய வாக்காளர் பட்டியலும் இறுதி செய்யப்பட்டு அட்டவணைப்படுத்தப்படும் நிலையில், வேட்பு மனுத் தாக்கலோடு அந்தத் தேர்தல் ரத்து செய்யப்படும் என்றே எதிர்பார்க் கப்பட்டது .

இதற்குள் அரசமைப்பின் கடைசித் திருத்தத் துக்கு அமைவாக, புதிய தேர்தல் ஆணையம் நியமிக்கப்பட்டு, அது பதவியேற்றுள்ள நிலையில், அந்தத் தேர்தல் ஆணையம் நிலுவையில் நிற்கும் அந்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு புதிய முயற்சி ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.

போதிய நிதி ஒதுக்க முடியாது என்ற காரணத் தைக் காட்டியே இந்தத் தேர்தலுக்கு ரணிலின் அரசு ஆப்படித்திருந்த நிலையில், தேர்தலுக்கான நிதியை ஒரேயடியாக வழங்காமல், கட்டம் கட்ட மாக வழங்கும்படி மாற்று யோசனைத் திட்டத்துடன் புதிய நகர்வை புதிய தேர்தல் ஆணையம் ஆரம்பித்திருக்கின்றது.

தேர்தல் நடத்துவதற்காக முதற்கட்டமாக 220 கோடி ரூபாயையும் -

மிகுதி 680 கோடி ரூபாவை தேர்தல் முடிந்து மூன்று மாத காலத்திலும் -

வழங்கக்கூடியதாக ஒதுக்கீடு செய்வதற்கு திறை சேரி இணங்குமானால், இந்தத் தேர்தலை நடத்தி முடிக்க இயலும் என்ற புதுத் திட்டத்தை முன் வைத்து திறைசேரியை அனுகியிருக்கின்றது தேர்தல் ஆணையம்.

ஆனால் தாம் போட்டியிட விரும்பியிருக்கும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வேறு எந்தத் தேர்தலையும் தேசிய மட்டத்தில் நடத்த அனுமதிப்பதில்லை என்ற சுயநல அரசியல் முடி வில் தீவிரமாக இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த முயற்சியையும் தமது நரித்த திரங்கள் மூலம் எப்படியும் முறியடித்தே தீருவார் என்பது திண்ணம். ஏனெனில் அவர்தான் தேர்தல் என்றால் தொடை நடுங்கியாயிற்றே...!

## மட்டக்குளி பிரதேசத்தில் திருடியவர் கைதானார்!

வீடுகளுக்குள் புகுந்து பெறுமதிமிக்க பொருள்களைத் திருடிய ஒருவர் மட்டக்குளி பிரதேசத்தில் கைது செய யப்பட்டுள்ளார்.

மேல்மாகாண புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய முன்னெடுப்பட்ட சுற்றி வளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவ, மினுவாங்கொடை, வத்தளை, மஹா பாகே ஆகிய பிரதேசங்களில் சந்தேக நபர் வீடுகளை உடைத்து பெறுமதிமிக்க பொருள்களைத் திருடியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிள், தங்க நகைகள், கையடக்கத் தொலைபேசிகள், வெளிநாட்டு நாணயத்தாள்கள் உள் ளிட்ட பல பெறுமதியான பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பமுனுகம பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடையவர் என்று மட்டக்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை அடுத்துத் தெரிவித்துள்ளனர்.



## புலமைப்பரிசில் மாணவருக்கு ஆசிவேண்டி விசேட பூசை!

(வி.ரி. சகாதேவராஜா)

நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் இன்று இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோன்றிய மாணவர்களுக்கு ஆசி வேண்டி பாடசாலையிலுள்ள கல்வித் தெய்வத்துக்கு விசே பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் நாவிதன்வெளி முத்துமாரியம்மன் பிரதமகுரு சுவேந்திரன் குருக்கள் இந்த் விசேட பூசைகளை நடத்தி மாணவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார்.

பாடசாலையின் ஆரம்ப நெறி பகுதித் தலைவர் திருமதி விஜயபிருந்தா பிரதீபனின் ஏற்பாட்டில் இது நடைபெற்றது.

## மஸ்கெலியாவில் 7 நிலையங்களில் பரீட்சை

ஹட்டன் கல்வி வலயம் கோட்டம் மூன்றில் உள்ள ஏழு பரீட்சை நிலையங்களில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை இடம்பெற்றது.

கோட்டம் மூன்றில் உள்ள மொக்கா தமிழ் வித்தி யாலயம், சாமிமலை கவரவில்லை தேசிய பாடசாலை, சாமிமலை பாரதி வித்தியாலயம், புளும்பீல்ட் தேசிய பாடசாலை, மஸ்கெலியா சென் ஜோசப் தேசிய பாட சாலை, நல்லதண்ணி தேசிய பாடசாலை,லக்கம் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் பரீட்சை இடம்பெற்றது.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைப் பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பிய பின்னர் கொட்டும் மழையில் காத்து நின்று அழைத்துச் சென்றனர்.





# கல்முனை சுகாதார பணிமனையில் இளைஞர்களுக்கான செயலமர்வு

(நூருல் ஹுதா உமர் )

இலங்கை மனித மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் கல்முனை பிராந்திய பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் ஒருங்கிணைப்பில் 'இளைஞர்கள் எதிர்கொள்ளும் சுகாதார சவால்கள்' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வுச் செயலமர்வு கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் பணிப்பாளர் எஸ். ஏ. முஹம்மட் அஸ்லம் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஐ. எல். எம். றிபாஸ் கலந்து கொண்டு விரிவுரைகளை நடத்தினார்.

நிகழ்வின் பிரதான வளவாளராக கல்முனை பிராந்திய பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். என். எம். தில்ஷான் கலந்துகொண்டார்.

செயலமர்வில் பங்குபற்றிய இளைஞர், யுவதிகளுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் சான்றிதழ் வழங்கப்பட்டது.

# ஆலயத்தில் இருந்து அம்மன் சிலையை அகற்றுவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு!

## கல்முனை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்தது

( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை, நற்பிட்டிமுனை ஸ்ரீ கணேசர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள அம்மன் சிலையை அங்கிருந்து அகற்றுவதற்கு கல்முனை மாவட்ட நீதிமன்றம் இடைக்காலதடைஉத்தரவு விதித்துள்ளது.

கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் கரைவாகுப்பற்றை இறுதியாக ஆண்ட செல்லையா வன்னிமையின் பெண்ணடி சார்பில் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில் ஒன்பது பேர் இந்த வழக்கைத் தாக்கல் செய்தனர்.

கடந்த 400 வருடங்களாக நடைபெற்று வந்த பாரம்பரிய வழிபாட்டு முறைக்கு மாற்றாக நற்பிட்டிமுனை கணேசர் ஆலயத்திலிருந்து அம்மன் சிலையை சேனைக்குடியிருப்பு பத்திர காளியம்மன் ஆலயத்துக்குக் கொண்டு சென்று வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக அனுமதியின்றி நட்பிட்டிமுனையில் கட்டப்பட்ட புதிய ஆலயத்துக்கு இந்தச் சிலையைக் கொண்டு செல்ல எதிராளிகள் தீர்மானித்துள்ளார்கள்.

இதனால் இரண்டு ஊர்களுக்கும் இடையே சண்டை இடம்பெறும் வாய்ப்பு இருப்பதால், இதனை தடை செய்யுமாறு கோரி இந்த வழக்கு சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையிலான ஒன்பது பேர் கொண்ட குழுவால் தாக்கல் செய்யப்பட்டது.

கணேசர்ஆலய தலைவர் தம்பிராசா ரவிராஜ் உள்ளிட்ட நான்கு உறுப்பினர்களுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கை விசாரித்த கல்முனை மாவட்ட பதில் நீதிபதி ஏ.எம்.எம். றியால் இந்த இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நேற்று முன்தினம் 13 ஆம் திகதி இந்த வழக்கு பதில் நீதிபதி எ.எம் . றியால் தலைமையில் இடம்பெற்றது.

நீதிமன்ற கட்டளையை மீறும்பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட நேரிடும் என்றும் மாவட்ட பதில் நீதிபதி றியால் தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரி கூட்டுறவுக் கிளைகளில் குறைந்த விலைகளில் பொருள்கள்

(த.சுபேசன்)

சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் ஏனைய வர்த்தக நிலையங்களை விட குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என இயக்குனர் சபை தெரியப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபையைச் சேர்ந்தவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்–

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாணத்திலேயே பொருள்களைக் கொள்வனவு செய்து வந்தது.

இந்த நிலையில் இறுதியாக இடம்பெற்ற சங்கத்தின் இயக்குனர் சபைக் கூட்டத் தீர்மானத்துக்கு அமைய 2009 ஆம் ஆண்டுக்குப் பின் முதல் தடவையாக சங்கத்துக்கு உரித்தான கனரக வாகனத்தில் நேரடியாக கொழும்பு சென்று பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

முதல் தடவையாக 50 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இதன் மூலம் ஏனைய வர்த்தக நிலையங்களை விட குறைவான விலைகளில் சங்கக் கடைகளில் மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.



# நாடளாவிய ரீதியில் நடந்து முடிந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை

(எம்.ஏ.றமீஸ், மஸ்கெலியா நிருபர், பழுவூரான்)

நாடளாவிய ரீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை (15) தரம் -5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெற்றது. 3 லட்சத்து 37 ஆயிரத்து 956 பரீட்சாத்திகள் தோற்றினர். அத்தோடு இதற்காக 2 ஆயிரத்து 888 பரீட்சை நிலையங்கள் ஒழுங்குபடுத் தப்பட்டிருந்தன.

இந்தப் பரீட்சையில் மட்டக்களப்பில் மட்டக்களப்பு மத்தி, பட்டிருப்பு, மட்டக் களப்பு மேற்கு மற்றும் கல்குடா வலயங் களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 218 மாணவர்கள் பரீட்சையில் தோற்றினர்.

# கல்முனை கல்வி மாவட்டத்தில் 8,156 மாணவர்கள் தோற்றினர்

இவ்வாண்டுக்கான தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை இன்று (15) நாடு தழுவிய ரீதியில் இடம்பெற்றது. இதற்கமைவாக, கல்முனை கல்வி மாவட்டத்தின் கீழுள்ள அக்கரைப்பற்று, கல்முனை, திருக்கோ வில் மற்றும் சம்மாந்துறை ஆகிய கல்வி வலயங்களில் சுமூகமான முறையில் இப்பரீட்சை இடம்பெற்றது.

கல்முனை கல்வி மாவட்டத்தில் இம்முறை 72 பரீட்சை மத்திய நிலை யங்களில் இப் பரீட்சை இடம்பெற்றது. 8156 மாணவர்கள் இம்மாவட்டத்தில் இருந்து பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். 4151 ஆண் மாணவர்களும், 4005 பெண் மாணவிகளும் இப்பரீட்சைக்காக தோற்றியிருந்தனர்.

இம்முறை 8125 மாணவர்கள் தமிழ் மொழி மூலமாகவும், 31 மாணவர்கள் சிங்கள மொழி மூலமும் இப்பரீட்சையில் தோற்றியிருந்தனர்.

பரீட்சைக் கடமைக்காக 650 கல்வித் துறை அதிகாரிகள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப் பட்டனர்.

இப்பரீட்சைக்காக கல்முனை கல்வி வலயத்தில் 3095 மாணவர்களும், சம்மாந்துறை கல்வி வலயத்தில் 1735 மாணவர்களும், அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் 2314 மாணவர்களும், திருக்கோவில் கல்வி வலயத்தில் 1012 மாணவர்களும் தோற்றியிருந்தனர்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் 22 பரீட்சை மத்திய நிலையங்களிலும், திருக்கோவில் கல்வி வலயத்தில் 10 மத்திய நிலையங்களிலும், கல்முனை கல்வி வலயத்தில் 26 மத்திய நிலை யங்களிலும், சம்மாந்துறை கல்வி வலயத்தில் 14 மத்திய நிலையங்களிலும் இப்பரீட்சை இடம்பெற்றது.

# கனமழையால் வெள்ளத்தில் மூழ்கின வயல் நிலங்கள்!

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று இரவு (14) பெய்த கனமழை காரணமாக தம்பலகாமம், கிண்ணியா போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தற்போது வயல் விதைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் பலத்த மழை காரணமாக முற்றாக வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

கிண்ணியா சூரங்கல் கற்குழி உள்ளிட்ட வயல் நிலப்பகுதிகள் மற்றும் தம்பலகாமம் கோயிலடி உள்ளிட்ட பல வயல் நிலங்கள் மூழ்கியுள்ளன.

இதனால் விவசாயிகள் வயலை உழுது விதைப்பை உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.





# அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு சிறுநீரகச் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

## தொழிலதிபர் தௌசீத் வழங்கினார்

**(சியாத் எம்.இஸ்மாயில் )**

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலைக்கு இரண்டு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த (10) ஆம் திகதி வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் எம்.பி. தௌசீதால் இந்த சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் மற்றும் ஹீமோடையாலிஸ்க்கான போர்ட்டபிள் என்பன வைத்திய சாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், சிறுநீரக விசேட வைத்திய நிபுணர் டாக்டர். நயோமி வடுவகே, வைத்தியசாலை குழுத் தலைவர் பொறியியலாளர் வை.பி.சமட், சிறுநீரக சுத்திகரிப்புப் பிரிவு மற்றும் சுகாதார தர பாதுகாப்பு பதில் பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம். எச்.எம்.சனூபர், திட்டமிடல் பதில் பொறுப்பு வைத்தியர் டாக்டர் .எம்.எம். தாஸிம், வைத்திய நிபுணர்களான டாக்டர்கள் றிப்ஷான் ஜெமீல், ஐ.எல். மாஹில், இன்பாக் லுதுப்டீன், அரச மருத்துவ அதிகாரிகள் கிளை சங் கத்தின் செயலாளர் டாக்டர். ஏ.சீ. அப் துல் றசாக், தாதிய பரிபாலகர் பி.ரி. நௌபர், வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை குழு உறுப்பினர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குருதி சுத்திகரிப்பு, நீண்ட காலமாக சிறுநீரக நோயினால் அவதியுறும் நோயாளர்களின் பிரச்சினைகளுக்கு அக்கரைப்பற்றில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

சிறுநீரக நோயாளர்கள் தூர இடங்களுக்குச் சென்று அலைந்து திரிந்து கால விரயம், பணச் செலவு போன்ற அசௌகரியங்களை எதிர் கொள்ளாது வைத்திய சேவைகளைப் பெற்று நன்மையடையுமாறு கிழக்குக் கரையோரப் பிராந்திய மக்களை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ரீ.எஸ். ஆர்.ரீ.ஆர்.றஜாப் கேட்டுக்கொண்டார்.

சிறுநீரக கிளினிக்கானது, அக்கரைப் பற்று ஆதார வைத்தியசாலையில் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தின் பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் நடைபெற்று பெற்றுவருகின்றது.

சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் அன்பளிப்பு செய்தமையை நினைவு கூர்ந்து வைத்திய குழுமத்தால் ஞாபகச் சின்னம் வழங்கப்பட்டது.




# விதை நூல் வெளியீட்டு விழா!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

காத்தான்குடியில் கவிதாயினி ஹஸீபா தௌபீக் எழுதிய அவளதிகாரம் கவிதை நூல் வெளியீட்டு விழா காத் தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

காத்தான்குடி நவ இலக்கிய மன்றத் தின் ஏற்பாட்டில் இந்த நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது.

காத்தான்குடி நவ இலக்கிய மன்றத் தின் தலைவர் பாவலர் சாந்திமுகைதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நூ ல் வெளியீட்டு விழாவில் கலை இலக்கிய வாதிகள், கலைஞர்கள், அதிகாரிகள் காத்தான்குடி நவ இலக்கிய மன்றத்தின் உறுப்பி னர்கள் என பலரும் கலந்து கொண்ட னர்.

நூலின் நயப்புரையை காத்தான்குடி நவ இலக்கிய மன்றத்தின் செயலாளர் ஓய்வு பெற்ற ஆசிரியர் எம்.எஸ்.அமீர் அலி நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் நூலாசிரியர் கவி தாயினி ஹஸீபா தௌபீக்குக்கு காத் தான்குடி நவ இலக்கிய மன்றத்தின் சார்பில் ஆசிரியை திருமதி ஹாஜரா கலீலூர் ரஹ்மான் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். நவ இலக்கிய மன்றத்தால் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.




# கந்தளாய், பதுளை ஆஸ்பத்திரிகளுக்கு சிறுநீரகச் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

## ஆளுநர் கோரியதை அடுத்து ஐ.ஓ.சி. வழங்கியது

**(அப்துல்சலாம் யாசீம், அஸ்ஹர் ஆதம், எம்.எம். றம்ஸீன், நூருல் ஹுதா உமர்)**

கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் முயற்சியில் சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பல இலட்சம் பெறுமதியான சிறுநீரகச் சுத்திகரிப்பு இயந்திரங்கள் திருக்கோணமலை, கந்தளாய் வைத்தியசாலை மற்றும் பதுளை வைத்தியசாலை ஆகியவற்றுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. ஐ.ஓ.சி. நிறுவனத்தின் தலைவர் தீபக்தாஸிடம் கிழக்கு மாகாண ஆளுநர் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் இந்த உயிர்க்காக்கும் சிறுநீரக இயந்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

இயந்திரங்களைக் கையளிக்கும் நிகழ்வு திருகோணமலை ஐ.ஓ.சி. தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதன்மூலம் மேற்படி இரண்டு வைத்தியசாலைகளிலும் சிறுநீரக சிகிச்சைகளுக்காக செல்லும் நோயாளர்களின் உயிராபத்துகள் எதிர்காலத்தில் குறைவடையும்.

இலங்கையில் சிறுநீரக நோயாளர் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் சூழலில் இந்த இயந்திரங்கள் உயிரிழப்புகளைக் குறைவடையச் செய்யும் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# கலாபூஷணம் அரச விருது பெற்றார் சிரேஷ்ட அண்ணாவியார் இஸ்ஸதீன்




**(எம்.எஸ். எம். ஸாகிர்)**

2022ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் அரச விருதினை சாய்ந்தமருதைச் சேர்ந்த சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன் பெற்றுக் கொண்டார்.

கலைஞர்களுக்கான மகுடம் சூட்டும் 38 ஆவது கலாபூஷணம் அரச விருது விழா – 2023 புதன்கிழமை (11) மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை ஜனநாயக சோசலிச ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருதில் கோலாட்டம் எனும் பொல்லடிக் கலையை முறையாகப் பயின்று, சிறந்த முறையில் அதனை வளர்ந்து வரும் பொல்லடிக் கலைஞர்களுக்கு பயிற்றுவித்துக் கொண்டிருக்கும் சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன் கலாபூஷணம் அரச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சிறந்த கலைப்பண்போடு வாழும் இக்கலைஞருக்கு கலாபூஷணம் அரச விருது கிடைத்தமையையிட்டு கலை உலகம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



# சரியானதா...? சங்கடமா...?

இன்று சமூக ஊடகங்கள் நமது அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாகிவிட்டன. நாம் தொடர்பு கொள்ளும் மற்றும் தகவல்களைப் பயன்படுத்தும் விதத்தை இவை மாற்றியமைக்கின்றன. பேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டா கிராம் மற்றும் டிக்டோக் போன்ற சமூக ஊடக தளங்கள் நாம் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளும் விதத்தையும் உலகத்துடன் ஈடுபடுவதையும் மறுவரையறை செய்துள்ளன.

இந்த சமூக ஊடகங்களின் சிக்கலான உலகத்தை விமர்சன ரீதியாக ஆராய்ந்து அணுகின்ற கட்டாயத்தில் நாம் இன்று உள்ளோம். அதன் எண்ணற்ற நன்மைகள் மற்றும் தீமைகள் சமூகத்தின் பல்வேறு அம்சங்களில் அதன் செல்வாக்கு பற்றி சிந்திப்பதும் அவசியமாகிறது.

இதன்வழி தனிநபர்களும் சமூகங்களும் அதன் ஆபத்துகளைத் தணிக்கும் போது அதன் உச்ச அளவு நன்மைகளை அறுவடை செய்ய முடியும்.

சமூக ஊடகங்களால் எண்ணற்ற நன்மைகள் நாளாந்தம் நம்மிடையே நிகழ்கின்றன. இதன் இன்றைய பயன்பாட்டால் மானிடரிடையே ஒரு மேம்படுத்தப்பட்ட தொடர்பு வழித் திறந்துள்ளது. இந்த உலகளாவிய இணைப்புள்ள சமூக ஊடகம் வழியாக ஒவ்வொரு தனிநபரும் உலகெங்கிலும் உள்ள மக்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ள முடிகிறது.

இது புவியியல் தடைகளை உடைத்துவிட்டது. இயற்கையின் எத்தகைய எல்லையும் இதன் முழு நிகழ்நேர தொடர்புக்கு அனுமதிக்கிறது. உறவுகளை வலுப்படுத்த வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது. முக்கியமாக பேஸ்புக் மற்றும் இன்ஸ்டா கிராம் போன்ற பிரபலமான தளங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் குறிப்பாக தொலைவில் வசிப்பவர்களுடன் தொடர்பில் இருக்க உதவுகின்றன. இது வலுவான சமூக பிணைப்புகளுக்குப் பங்களிக்கிறது.

மேலும் இதன் மூலம் உலகெங்கிலும் தகவல் பரப்பும் செயன்முறை தடையின்றி நிகழ்கிறது. அதன்வழி விரைவான செய்தி விநியோகத்தின் பயன்களை இன்றுள்ள சமூக ஊடகத்தின் சகாக்கள் சம்பாதித்துக் கொள்கின்றனர். இவ் விரைவுச் செய்தி என்பது பாரம்பரிய ஊடகங்களை விட வேகமாகச் செய்திகள் மற்றும் தகவல்களைப் பரப்புவதற்கான சக்தி வாய்ந்த கருவியாகும்.

பல நாடுகளின் நெருக்கடிகள் மற்றும் அவசர காலங்களில் இது மிகவும் பயனுள்ளதாக இருந்தமைக்கும் அதன் பயனாளிகள் தான் சான்றுகளாகின்றனர். இந்தப் பயனர்கள் சமூக ஊடகங்களின் உள்ளடக்கங்களை உருவாக்கும் வாய்ப்பும் இன்று கிடைக்கப் பெற்றுள்ளது. அந்தவகையில் பிரஜைகள் ஊடகவியல் அதிக வளர்ச்சி கண்டுள்ளது. உதாரணமாக டுவிட்டர் மற்றும் யூடியூப் போன்ற தளங்களில் பயனர் உருவாக்கிய உள்ளடக்கம் முக்கியமான நிகழ்வுகள் மற்றும் சிக்கல்களின் பல தரப்பட்ட உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சமூக ஊடகங்களின் உள்ளார்ந்த பார்வையில் கணக்கிட முடியாத கல்வி வாய்ப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் இங்கு வளங்களுக்கான அணுகல் இலகுபடுத்தப்பட்டுள்ளமையாகும். அதன்வழி சமூக ஊடகத் தளங்கள் கல்வி உள்ளடக்கத்துக்கான மையங்களாகச் செயற்படுகின்றன. இலவச படிப்புகள், பயிற்சிகள் மற்றும் வளங்களை பரந்த அளவில் இவை பகிர்ந்தளிப்பதைக் காணலாம். மேலும் இந்த உலகளாவிய கற்றல் வலையமைப்பு சமூக ஊடகங்கள் மூலம் கற்பவர்களை உலகெங்கிலும் உள்ள கல்வியாளர்கள் மற்றும் சகாக்களுடன் இணைக்கிறது. உலகளாவிய கற்றல் சமூகங்களை உருவாக்குகிறது.

அடுத்தமைந்த தொழில்முறை வலையமைப்புக்களிலும் சமூக ஊடகங்கள் செல்வாக்குச் செலுத்த தவறவில்லை. முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தொழில் முன்னேற்றம் இன்று நிகழ்ந்துள்ளது. லிங்க்ட் இன் போன்ற தளங்களின் மூலம் வேலை தேடுதல் மற்றும் தொழில்முறை மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். தொழில் முனைப்புள்ள தனிநபர்கள் தங்கள் திறமைகளையும் சாதனைகளையும் வெளிப்படுத்த சமூக ஊடகங்களை தங்கள் வாழ்வில் அனுமதிக்கிறார்கள். இந்தத் தொழில் முனைவு காரணமாகச் சிறு வணிகங்கள் கூட சமூக ஊடகங்கள் ஊடாகச் சந்தைப்படுத்தல், வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் பிராண்ட் உருவாக்கம் ஆகியவற்றைத் திறன்பட சாத்தியப்படுத்தி பயனடைகின்றனர்.

இத்தகைய சமூக ஊடகங்களால் சமூக செயல்பாடுகள் மற்றும் விழிப்புணர்வு மற்றும் அணிதிரட்டல் நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சமூக ஊடகங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. நல்லதொரு மாற்றத்தை உண்டாக்க முயற்சி செய்யும் ஆர்வலர்கள் தங்கள் கருத்தொருமித்த சமூகங்களை அணிதிரட்டுவதற்கு இவை உதவுகின்றன.

நிகழ்நிலை தொடர்பு மனுக்கள் மற்றும் பிரச்சாரங்கள் செய்வதற்குரிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக Change.org மற்றும் GoFundMe போன்ற தளங்கள் சமூக செயற்பாடுகளைத் தொடங்குவதற்கும் ஆதரிப்பதற்குமான கருவிகளை வழங்குகின்றன.

கலாச்சார பரிமாற்றம் மற்றும் திறன் வெளிப்பாடு நிகழ்கிறது. திறமையை வெளிப்படுத்த விளையும் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள் மற்றும் படைப்பாளிகள் தங்கள் படைப்புகளை உலகளாவிய பார்வையாளர்களுக்குக் காட்ட ஐளெவயபசயஅ மற்றும் லுழரவரடிந போன்ற தளங்களைப் பயன்படுத்த முடியும்.

இன்னொரு வகையில் கலாச்சாரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் கலாச்சார மரபுகள் மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சரியானதா...?

**(11ஆம் பக்கத் தொடர்ச்சி)**

பகிர்ந்து கொள்ளவும் சமூக ஊடகங்கள் உதவுகின்றன. மனநலப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்கும், களங்கத்தைக் குறைப்பதற்கும் தேவைப்படுபவர்களுக்கு ஆதரவை வழங்குவதற்கும் ஒரு தளத்தை வழங்குகின்றன.

நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்கள் தங்கள் அனுப வங்கள், ஆலோசனைகள் மற்றும் உணர்ச்சிபூர்வமான ஆதரவை இணைக்க மற்றும் பகிர்ந்து கொள்ள சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு எண்ணிலடங்கா நன்மைகளை சமூக ஊடகங்களிடத்தில் இருந்து நாளாந்தம் பெற்றுக் கொண்டாலும் அதன் இன்னொரு முனையில் ஏராளம் இன்னல்களும் உள்ளன.

அவற்றில் தலையானது தனியுரிமை கவலைகள் தான். அதாவது சமூக ஊடக தளங்கள் பெரும்பாலும் பயனர்களின் விரிவான தரவுகளை சேகரிக்கின்றன. தனியுரிமை மற்றும் கண்காணிப்பு பற்றிய கவலைகளை எழுப்புகின்றன. இங்கு தரவு மீறல்கள் மற்றும் தனிப்பட்ட தகவல்களுக்கான அங்கீகரிக்கப்படாத அணுகல் நிகழ் கிறது. இதன்மூலம் மில்லியன் கணக் கான பயனர்கள் அடையாள திருட்டு மற்றும் தனியுரிமை மீறல்களுக்கு ஆளாக்கியுள்ளனர். சமூக ஊடகங்க ளின் அதிகப்படியான பயன்பாடு மனநல பிரச்சினைகளையும் உண்டு பண்ணுகிறது.

பயனர்கள் தங்களைத் தாங்களே தாழ்வுபடுத்தி ஆன்லைன் நபர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதால் போதாமை மற்றும் குறைந்த சுயமரியாதை உணர்வுகளுக்கும் வழிவகுக்கிறது. மேலும் ஆன்லைன் துன்புறுத்தல் மற்றும் சைபர்புல்லிங் ஆகியவை பரவலாக உள்ள சிக்கல்கள் பாதிக்கப்பட்டவர்களின் மன ஆரோக்கியத்தை எதிர்மறையாக பாதிக்கிறது. பெரும்பாலும் இவை கவலை மற்றும் மனச்சோர்வுக்கு வழிவகுக்கின்றன.

தவறான தகவல் மற்றும் போலி செய்திகளை சமூக ஊடகங்களில் காணவியலும் இந்தத் தவறான தகவல் வேகமாக பரவிப் பொதுக் குழப்பத்துக்குப் பங்களிக்கிறது மற்றும் நம்பகமான ஆதாரங்களில் நம்பிக்கையை குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது. அதோடு சமூக ஊடகங்களின் அதிகப்படியான பயன்பாடு போதைக்கு வழிவகுக்கிறது. உற்பத்தித்திறன், உறவுகள் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வை எதிர்மறையாக பாதிக்கிறது.

குறிப்பாகத் தீங்கிழைக்கும் ஏமாற்றுக் காரர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி பயனர்களை ஏமாற்றித் தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துகின்றனர் அல்லது மோசடிகளுக்கு பலியாக்குகின்றனர். இவ்வாறு பாதிக்கப்படக் கூடிய பயனர்கள், குறிப்பாகக் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள், ஒன்லைன் வேட்டையாடுபவர்களுக்கு இலக்காகலாம்.

சமூக ஊடகங்களால் நேருக்கு நேர் தொடர்பு குறைவடைகிறது. சமூக ஊடகங்களின் அதிகப் பயன்பாடு தனிப்பட்ட தொடர்புகளைக் குறைக்கிறது. மிகக் குறைந்த அளவிலான நேரடி சமூகமயமாக்கல் தோன்றுகிறது. இது சமூக தனிமைக்கு வழிவகுக்கிறது. அதோடு ஒன்லைன் தொடர்புகளில் இருந்து தவறான புரிதல்கள் மற்றும் மோதல்கள் ஏற்படுகின்றன. ஏனெனில் தொனியும் நோக்கமும் தவறாகப் புரிந்துகொள்ளப்படலாம். இவை விமர்சன சிந்தனையிலும் நெருடலை ஏற்படுத்துகின்றன. சவுண்ட் பைட்ஸ் மற்றும் க்ளிக்பைட் கலாச்சாரம் தோற்றம் பெற்றுள்ளது. அதாவது சமூக ஊடகங்கள் சுருக்கத்தை வலியுறுத்துவதால், சிக்கலான விடயங்களைக் கூட எளிமையான ஒலியில் வழங்குதல் மற்றும் பரபரப்பான தலைப்புச் செய்திகளுக்குக் கீழ் தொடர்பற்ற விடயங்களைப் பேசுவதை உதாரணமாகக் கூறலாம். இன்னொரு புறம் சிக்கலான தலைப்புகளின் மீதான விவாதங்கள் பெரும்பாலும் முரண்பாட்டு வாதங்களாக மாறி, சிந்தனைமிக்க மற்றும் நுணுக்கமான உரையாடல்களைத் தடுக்கின்றன.

இத்தகைய சமூக ஊடகங்களின் நன்மை தீமை ஆகிய இரட்டைத் தன்மையைக் கருத்தில் கொண்டு, அதனை வழிநடத்தும் போது தனிநபர்கள், சமூகங்கள் மீதான தீமைகளைத் தணிக்கவும் நன்மைகளைப் பயன்படுத்தவும் முடியும். அவ்வாறு சமூக ஊடக உலகில் திறம்பட வாழ்வதற்கான உத்திகளைக் கையாள்வது அவசியமாகும். அதற்கு விமர்சன சிந்தனை துணை புரிகிறது. தவறான தகவல் மற்றும் தவறான உள்ளடக்கத்தைக் கண்டறிய இந்த விமர்சன சிந்தனை மற்றும் ஊடகக் கல்வியறிவை ஊக்குவிக்க வேண்டும். அவற்றுள் தனியுரிமை விழிப்புணர்வு மிக முக்கியமமானது. ஒன்லைன் தனியுரிமை, வலுவான கடவுச்சொற்களின் முக்கியத்துவம் மற்றும் தனிப்பட்ட தகவல்களை அதிகமாகப் பகிர்வதால் ஏற்படும் அபாயங்கள் குறித்து ஒவ்வொரு தனிநபரும் அறிந்திருத்தல் வேண்டும்.

சமூக ஊடகங்களுக்கு அடிமையாவதைத் தடுப்பதற்கு நேர நிர்வாகத்தை வளர்த்துக் கொள்ளுதல் சிறந்த மாற்றீடாகக் காணப்படும். அதாவது சீரான டிஜிட்டல் வாழ்க்கை முறையை உறுதிப்படுத்தும் வகையில் சமூக ஊடகப் பயன்பாட்டிற்கான நேர வரம்புகளை அமைக்க வேண்டும். நேரடியாக உலகத்துடன் மற்றும் தனிப்பட்ட உறவுகளுடன் மீண்டும் இணைவதற்கு சமூக ஊடகங்களிலிருந்து வழக்கமான இடைவெளிகளை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

மரியாதைக்குரிய ஆக்க பூர்வமான ஆரோக்கியமான மற்றும் பயனுள்ள நிகழ்நிலைத் தொடர்புகளையும் உரையாடலையும் ஊக்குவிக்க வேண்டும்.

சமூக ஊடகங்கள் ரீதியான துன்புறுத்தலைக் குறைக்கப் புகாரளிக்கவும் தீங்கிழைக்கும் கணக்குகளைத் தடுக்கவும் பயனர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். மனநலம் விழிப்புணர்வு நிலையில் இருத்தல் வேண்டும். இதற்காக சுய கவனிப்புக்களை மேற்கொள்ளுதல் சிறந்தது. பயனர்கள் முடிந்தவரை அரச மேற்பார்வையில் செயலாற்ற வேண்டும் பயனரின் தனியுரிமையைப் பாதுகாக்கும், தவறான தகவல்களைக் கையாள்வது மற்றும் தீங்கிழைக்கும் உள்ளடக்கத்தைத் தடுக்கும் அரச விதிமுறைகளுக்கான அணுகலை இலகுபடுத்திக் கொள்ள வேண்டும்.

சமூக ஊடக தளங்களை அவற்றின் உள்ளடக்க அளவீட்டு நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளுக்கு அமைவாக பொறுப்பாக வைத்திருத்தல் இன்னும் சிறந்ததாகும். நேர்மறையான உள்ளடக்கத்தையும் மேம்படுத்துதல் வேண்டும். நேர்மறையான சமூக விழுமியங்களை ஊக்குவிக்கும் கல்வி மற்றும் தகவல் உள்ளடக்கத்தை உருவாக்குதல் மற்றும் பகிர்வதை சாத்தியப்படுத்த வேண்டும்.

பெற்றோர்களின் வழிகாட்டலும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. பெற்றோர்களும் பாதுகாவலர்களும் தங்கள் குழந்தைகளின் சமூக ஊடக பயன்பாட்டைக் கண்காணித்து வழிகாட்ட வேண்டும், அவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்ய வேண்டும். சமூக ஊடகங்களின் நன்மைகள் மற்றும் அபாயங்கள் குறித்து குழந்தைகளுடன் திறந்த தொடர்பை ஏற்படுத்தும் கலந்துரையாடல்களில் ஈடுபட வேண்டும்.

இத்தகைய சமூக ஊடகம் என்பது இரு கூராயுதமாகும். குறிப்பிடத்தக்க சவால்களின் மத்தியிலும் இது எண்ணற்ற நன்மைகளை வழங்குகிறது. தகவல் தொடர்பு, தகவல் பரவல் ஆகியவற்றில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இது தனியுரிமை கவலைகள், மனநல பிரச்சினைகள் மற்றும் தவறான தகவல்களின் பரவலுக்கு வழிவகுத்துள்ளது. சமூக ஊடகங்களின் பயனுள்ள பாவனைக்கான திறவுகோல் சமநிலையைக் கையாள்வதாகும். டிஜிட்டல் கல்வியறிவை வளர்ப்பது, ஆன்லைன் நாகரீகத்தை ஊக்குவித்தல் மற்றும் பொறுப்பான கொள்கைகளுக்கு வாதிடுதல் ஆகியவற்றில் இது தங்கியுள்ளது. அவ்வாறு செய்வதன் மூலம் சமூக ஊடகங்களின் மாற்றும் திறனைப் பயன்படுத்தி அதன் எதிர்மறையான தாக்கங்களைத் தணித்து ஆரோக்கியமான மற்றும் அதிக தகவலறிந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

**முருகையா தவக்குமார்,**
ஊடகக் கற்கைகள்,
இரண்டாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம் .

# மக்களவைத் தேர்தல் வியூகம்:

# தமிழக காங்கிரஸ் நிர்வாகிகளுடன் சோனியா காந்தி ஆலோசனை



அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மக்களவைத் தேர்தல் வியூகம் தொடர்பாக தமிழக காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்களுடன் சோனியா காந்தி சென்னையில் நேற்று ஆலோசனை நடத்தியுள்ளார்.

தி.மு.க. சார்பில் மகளிர் உரிமை மாநாடு சென்னையில் நேற்று நடைபெற்றது. அதில் பங்கேற்பதற்காக முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்று முன்தினம் சென்னை வந்தார்.

கிண்டியில் உள்ள விடுதியில் தங்கி இருந்த அவர், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி மற்றும் மாநில மூத்த நிர்வாகிகள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த கூட்டத்தில், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சோனியாகாந்தி நிர்வாகிகளிடம் கருத்து கேட்டபோது, தமிழகத்தில் 5 மாவட்டங்களுக்கு தலைவர்கள் நியமிக்கப் படவில்லை. அது தொடர்பாக கோப்புகள் அகில இந்திய காங்கிரஸ் தலைமைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இன்னும் நியமனம் நடைபெறவில்லை.

தமிழக காங்கிரஸ் பொறுப்பாளராக இருந்த தினேஷ் குண்டுராவ், கர்நாடக அமைச்சரான நிலையில், அவர் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டார். புதிய பொறுப்பாளர் இன்னும் நியமிக்கப்படவில்லை. தமிழகத்தில் கட்சி வளர்ச்சி அடைய பிரியங்கா காந்தியும், ராகுல் காந்தியும் அடிக்கடி தமிழகம் வர வேண்டும் என நிர்வாகிகள் கோரிக்கை வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து பேசிய சோனியா காந்தி, இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்த, மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் செய்யப்பட்ட சாதனைகளையும், 9 ஆண்டுகால மோடி ஆட்சியில் மக்கள் விரோத நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்தும் பொதுக்களிடம் தெரிவித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

காங்கிரஸ் கையில் எடுத்துள்ள சாதிவாரி கணக்கெடுப்பின் முக்கியத்துவம் குறித்தும் மக்கள் மத்தியில் விழிப் புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், மக்களவை தேர்தலில் நாம் மீண்டும் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்றால், கூட்டணி கட்சிகளுடன் இணக்கமாக பயணித்து, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் காங்கிரஸ் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றிபெற அனைவரும் பாடுபட வேண்டும் என்று சோனியா காந்தி அறிவுறுத்தியுள்ளார் என கூறப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து, தமிழகத் தில் காங்கிரஸ் வெற்றிபெற வாய்ப்புள்ள தொகுதிகள், அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் குழு அமைக்கும் பணிகள், தமிழகத்தில் கட்சி வளர்ச்சிப் பணிகள் குறித்து தமிழக நிர்வாகிகளிடம் சோனியா காந்தி ஆலோசித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

# கார் - லொறி மோதி விபத்து: 7 பேர் உயிரிழப்பு

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே கார் மற்றும் லொறி நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பெங்களூரைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து, பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில் இருந்து திருவண்ணாமலை வழியாக பெங்களூருக்கு கார் ஒன்று இன்று காலை சென்றது. செங்கம் அருகே பக்கிரிபாளையம் என்ற இடத்தில் திருவண்ணாமலை – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்ற போது எதிரே வந்த லொறியும்



காரும் நேருக்குநேர் மோதியுள்ளனர்.

இந்த விபத்தில் காரில் பயணம் செய்த மூன்று குழந்தைகள் உட்பட ஏழு பேர் உயிரிழந்துள்ளனர் என முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது. இதுபற்றி தகவல் அறிந்த செங்கம் உட்கோட்ட பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பொலிஸார் கொண்டு சென்றுள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த பெண் ஒருவருக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்தில் பலியானவர்களின் உறவினர் களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசாவில் 2 ஆயிரத்து 329 பேர் பலி: ஹமாஸின் முக்கிய தளபதி கொலை!



இஸ்ரேல் – ஹமாஸ் போர் 9 ஆவது நாளை தாண்டியுள்ளது. இந்த நிலையில் காசாவில் இதுவரை 2 ஆயிரத்து 329 பேர் உயிரிழந்துள்ளனர் என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

லெபனானில் இருந்து இன்று காலை இஸ்ரேலுக்குள் நுழைய முயன்ற ஹமாஸ் அமைப்பினர் மூவர் கொல்லப்பட்டுள்ளனர் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, காசாவில் வான், கடல், தரைவழி என மூன்று முனைத் தாக்குதலை நடத்தப்போகிறோம் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை அறிவித்துள்ளது. இது தொடர்பாக இராணுவ அறிக்கை வெளியாகியுள்ளது. முன்னதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு காசா எல்லையில் இராணுவ வீரர்களை சந்தித்தார். பின்னர் அளித்தப் பேட்டியில், ‘இனிமேல் தான் அதிகளவில் நடக்கவுள்ளது’ என்று கூறினார். அதனைத் தொடர்ந்து இத்த கைய அறிக்கையை இராணுவம் வெளி யிட்டுள்ளது.

அத்துடன், காசாவில் இடம்பெற்ற வான்வழித் தாக்குதலில் ஹமாஸ் படையின் நக்பா பிரிவின் தலைவர் பிலால் அல் கத்ரா கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது. காசாவிலிருந்து வெளியேற மக்கள் விரும்பினாலும்கூட ஹமாஸ் படையினர் அவர்களை தடுத்து நிறுத்துகின்றனர் என இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தற்காப்பு என்பதையும் தாண்டி அரங்கேறிக் கொண்டிருக்கிறது. போரில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்புகளும் ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுக்குத் திரும்ப வேண்டும் என்று சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி கூறியுள்ளார்..

பாலஸ்தீனப் பிரச்சினையில் ஐ.நா. தலையிட்டு சுமுகத் தீர்வு ஏற்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் சீன வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியுள்ளார்.

வடக்கு காசா பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் ஆயிரக்கணக்கானோர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இந்த மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் அங்கிருந்து வெளியேற மறுத்துவிட்டனர். அவர்களின் பாதுகாப்பை இஸ்ரேல் இராணுவம் கருத்தில் கொள்ள வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு, செஞ்சிலுவை சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

வடக்கு காசா பகுதியில் மிகவும் மோசமான நிலையில் சிகிச்சை பெறுவோருக்கு மனிதாபிமான அடிப்படையில் எகிப்து மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்க தயாராக உள்ளோம். அவர்களை எகிப்து எல்லைப் பகுதிக்கு அழைத்து வரலாம் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ரொயிட்டர் செய்தியாளர் உயிரிழப்பு

காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதால், லெபனான் எல்லையிலிருந்து ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது ரொக்கெட் குண்டு வீச்சு தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்த நிலையில் தெற்கு லெபனானில் நடைபெறும் தாக்குதல் குறித்து செய்தி சேகரிப்பதற்காக பத்திரிகையாளர்கள் சிலர் நேற்று முன்தினம் சென்றிருந்தனர்.

இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் ரொயிட்டர் செய்தி நிறுவனத்தின் ஒளிப்பதிவாளர் இசாம் அப்தல்லா உயிரிழந்துள்ளார். இவர்



லெபனானைச் சேர்ந்தவர். ஏனைய 6 செய்தியாளர்கள் காயம் அடைந்துள்ளனர்.

இந்த சோக சம்பவத்துக்கு வருந்துகிறோம் என இஸ்ரேல் இராணுவத்தின் செய்தி தொடர்பாளர் லெப்டினன்ட் கர்னல்ரிச்சர் ஹெக்ட் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இஸ்ரேல் தாக்குதலில்தான் இந்த உயிரிழப்பு நடந்தது என கூறவில்லை. இந்த சம்பவம் குறித்து ஆராய்ந்து வருகிறோம் என்று மாத்திரம் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், இது இஸ்ரேல் இராணுவத்தின் திட்டமிட்ட தாக்குதல் எனவும், இது குறித்து ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலிடம் முறையான புகார் அளிக்கவுள்ளோம் என்றும் லெபனான் வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.